17 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 6–3–33

"பறக்குதே ஏரோப்ளேன்!"



இந்தியாவின் செல்வ நிலைமை இப்போது உடைந்து போன ஏரோப்ளேன் ஸ்திதியில் இருக்கின்றது. வரவு செலவு திட்டம் என்ற பக்ஷிகளை அந்த விமானத்தில் கட்டி "ஹா பறக்குதே ஏரோப்ளேன்!" என்று பொக்கிஷ மந்திரிகள் ஜாலம் பேசுகின்றனர். விமானம் பறக்கவில்லை என்பதைக் குருடன் கூடச் சொல்லி விடுவான். ஆனால் 'பணம், பணம்' என்று விவசாயி பறப்பதுதான் உண்மை!

இருட்டில் கண்ணாடி பார்ப்பதா?

இந்தியாவில் இன்று அடிபட்டுக் கொண்டிருக்கும் விஷயங்கள் மூன்று. (1) காந்திஜியின் விடுதலை, (2) கல்கத்தா காங்கிரஸ் தடை, (3) வெள்ளைக் கடுதாசி. காந்திஜியின் விடுதலையைப் பற்றியும், காங்கிரஸ் தடுக்கப்பட்டது பற்றியும், டெல்லி சட்ட சபையில் வம்பு வந்த போது சர்க்கார் அதிகாரியான ஹெயிக் மகா திமிரோடு ஆணவத்தோடு கூறிய பதில்களை நாடு மறந்து விடவில்லை. அவரது பதில்களெல்லாம் அவரது மனத்தில் குமுறிக் கொண்டிருக்கும் ஆத்திரத்தையே காட்டின. ஆத்திரக்காரனின் புத்தியைப் பற்றியும், மனோவேகத்தைப் பற்றியும் விவரிக்க அவசியமில்லை.

ஒன்று மட்டும் அனைவரும் கவனிக்க வேண்டும். காந்திஜியோ அல்லது சிறையிலுள்ள எந்த பொறுப்புள்ள காங்கிரஸ் வாதியோ தங்களது விடுதலை விஷயத்தைப் பற்றி துளியாவது அக்கரை காட்டவில்லை. இதை நாம் முதலில் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். அப்படியிருக்க சட்ட சபையிலுள்ள அண்ணாந்தைகள் மூளை யின்றி ஏதாவது கேள்வி கேட்பானேன்? ஹெயிக் துரை உறுமுவானேன்? ஸம்மனில்லாது ஆகாரும் இந்த சட்ட சபை அங்கத்தினர்களை அறிவாளிகள் கண்டித்தே திருவர்!

பிரிட்டிஷாரால் தரப்படும் வெள்ளைக் கடுதாசியைப் பற்றி காங்கிரஸ் மகா சபையின் அபிப்பிராயம் என்னவென்பதை அறிய சர்க்கார் மனம் பறை யடித்துக் கொண்டிருக்கு மென்பதும் உண்மை.

"சிறையிலிருந்து கொண்டே காந்திஜியும் காங்கிரஸ்காரர்களும் வெள்ளைக் கடுதாசியைப் பற்றி அபிப்பிராயம் கூறுவார்களென எதிர்பார்ப்பது இருட்டில் கண்ணாடி பார்க்கச் சொல்வது போலிருக்கிறது" என்று தெளிவாக ராஜாஜி சொல்லி யிருக்கின்றார்.

அது மட்டுமன்று. அகில இந்தியக் காங்கிரஸின் காரியதரிசியான ஸ்ரீயுத ஆக்ராவாலா, "காங்கிரஸின் பழையக் காரியக் கமிட்டியைத் தவிர வேறு எவருக்கும் சட்ட மறுப்பை நிறுத்த அதிகாரமில்லை" என்பதை வெளிப்படையாகச் சொல்லி விட்டார். ஆகவே தினவெடுத்தவன் தான் சொறிந்து கொள்ள வேண்டும், துரைத்தனத்துக்கு காங்கிரஸின் அபிப்பிராயம் தெரிய வேண்டுமானால் தங்களுடைய கொள்கையை அவர்கள் தான் மாற்றிக் கொண்டாக வேண்டும். நிற்க,

மிதவாதிகளுக்கு ராஜாஜி ஒரு புத்திமதி சொல்லி யிருக்கிறார். "காங்கிரஸின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து இந்த சர்க்கார் வெள்ளைக் கடுதாசியை நுழைப்பதா? அந்த அரசியலை சிருஷ்டிப்பதில் மிதவாதிகள் ஒத்துழைக்கலாகாது" என்பதை ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார்.

காந்திஜியின் விடுதலைக்காக கரடியாகக் கத்திய மிதவாதிகளின் பேச்சை சர்க்கார் மிதித்து விட்டது. இனி மிதவாதிகளின் சுயமரியாதைக்கே இப்போது பெரிய சோதனை வந்திருக்கிறது. அவர்கள் பல்லை யிளிப்பார்களா, பவுருஷம் காட்டுவார்களா?

சீமைப் பத்திரிகை அபிப்பிராயம்

இந்தியாவின் இராஜீய நிலை அசையாமலிருக்கிறது. ஆனால் இந்தியாவில் சுறுசுறுப்பு மிகுந்திருக்க வேண்டிய சமய மென்னமோ இதுதான். ஏனெனில் அடுத்தாற் போல புது அரசியல் வரப் போகிறதாதலால், ஆங்காங்கு கட்சிகளை ஏற்படுத்தவும், தேர்தலில் கலந்து கொள்ளவும் தலைவர்கள் பிரயத்தனித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இந்தியாவில் எந்த முயற்சியையும் காணோம். சர்க்காருக்கும் காந்திக்கு மிடையே ஏற்பட்ட பெரிய பள்ளத்தில் துளி கூட மூடப்படவில்லை என்பது ஹோம் மெம்பர் வார்த்தையினின்றே தெரிகிறது. 'சட்ட மறுப்பை நிறுத்துவதே விடுதலைக்கு விலை' என்று சர்க்கார் சொன்னாலும் காந்திஜி அந்த விலையைத் தரப்போவதில்லை. வெள்ளைக் கடுதாசி வரும் வரை எல்லோர் தரப்பிலும் ஒய்ச்சல் தான்!

—*Time & Tide.*

"உள்ளாக் கட்டிக்கு"

"உள்ளாக் கட்டிக்கு சொன்னேன்" என்று குழந்தைகள் சொல்வது போல ஷூஸ்டர் தமது மூட்டையை அவிழ்த்து விட்டார். "நான் இந்தியாவின் சங்கட நிலைமையைப்பற்றி எனது வரவு செலவு திட்டத்தில் வருணித்தி யிருந்தால் இந்தியாவின் நாணயம் பிற நாடுகளில் கெட்டுப் போகு மன்றோ. ஆகவே வேணு மென்று தான் இந்திய நிலைமையை ஒஸ்தியாக வருணித்தேன்" என்று கூறி விட்டார். இந்த மாதிரி ஷூஸ்டர் மாறி மாறி பேசுவதைக் கேட்டுக் கொண்டு அங்கு குந்திக் கிடக்கின்ற பிராணிகளை என்னென்பது?

சர்க்கார் 'அபயம்' கூறுமா?

கடந்த இருநூறு வருஷங்களாக மேற்கே யுள்ள நாடுகளின் சந்தையாக இந்தியா இருந்து வருவது போதாதா? இப்பொழுது கிழக்கே யுள்ள ஜப்பான் போடும் போட்டி இந்தியத் தொழிலுக்கு பெருத்த ஆபத்தாக விருந்து வருகின்றதே! என் செய்வது?

பிப்ரவரி மீ 24உ, வட இந்திய வியாபாரச் சங்கத்தில் பேசுகையில், "ஐயோ! ஜப்பானியப் போட்டி இந்தியாவின் தொழில்களைக் கொல் கின்றதே. சென்ற சில மாதங்களாக எங்கு பார்த்தாலும் ஜப்பானிய சாமான்கள் குவிந்து கிடக்கின்றன. இந்தியச் சரக்குகளை விட அவை ரொம்ப மலிவாக விற்கின்றன. இதைத் தடுக்கா விட்டால் பெருத்த ஆபத்து நேரிடும்" என்று ஏ. எல். கார்னீஜி என்பார் பேசினர்.

ஜப்பானிய வர்த்தகன் தனது சாமான்களை இந்தியாவில் கொணர்ந்து இந்தியாவில் உற்பத்தி யாகும் சாமான்களுக்கும் குறைவாக விலை வைத்து விற்பதற்கு அவனுக்கென்ன அநுகூல மிருக்கிற தென்று கேட்கலாம். ஜப்பானிய நாணயத்திற்கு 'யென்' என்று பெயர். 1931-ம் ஹு டிஸம்பர் மீ 11-ம தேதியன்று 100 யென் களுக்கு 210 ரூபா யென்று நாணயமாற்று விகிதம் இருந்தது. இப்போது 100 யென் களுக்கு 80 ரூபாய் தான் விகிதம்! அப்படி விகிதம் குறைந்து போயிருப்பதால் பழைய விலையில் பாதிக்கும் குறைவாக விற்பதற்கு ஜப்பானிய வர்த்தகனுக்கு அநுகூலமிருக்கிறது. ஜப்பானிய சர்க்கார் தங்கள் வியாபாரிகளுக்கு அவ்வளவு உதவி செய்து கொண்டிருக்கிறார் கள். நிற்க,

வியாபாரத் துறையில் ஜப்பானுக்கு அடி மைப்பட்டு, உள்நாட்டுக் கைத்தொழில்களைச் சாகும்படி இந்தியா என்னமாகச் சம்மதிக்கும்?

"பனியன் உற்பத்தித் தொழிலில் மட்டும் இந்தியா 3 கோடி ரூபாய் முதல் போட்டிருக் கிறது. குமாஸ்தாக்கள், ஏஜண்டுகள் நீங்கலாக தொழிலாளர்கள் மட்டும் 25 ஆயிரம் பேர்கள் இதனால் வயிறு பிழைத்து வருகின்றனர். ஜப் பானியப் போட்டியின் காரணமாக இந்தத் தொழில் நாசமானால் இவ்வளவு ஆத்மாக்களும் பட்டினி கிடக்க வேண்டி யிருக்கும்" எனப் பனியன் வியாபாரிகள் முறை யிட்டிருக்கின்ற னர். சர்க்கார் இவர்களுக்கு "அபயம்" கூறுமா?

நமது குறிப்புகள்

ஒநாய்கள் ஒலம்!

இந்திய வரவு செலவு திட்டத்தைப்பற்றி நாம் கூட அவ்வளவு அக்கரை காட்ட வில்லை, ஆனால் சீமையிலுள்ள பத்திரிகாசிரியர்களும், ஆலைத் தொழிலாளிகளும் கண்களில் திரியைப் போட்டுக் கொண்டு கவனித்திருக்கிறார்கள்.

லங்காஷயர் ஆலைக்காரர்கள், "எங்கள் துணி யின் இறக்குமதி வரியைக் குறைப்பதுபற்றி ஒரு பேச்சுக்கூட இந்திய வரவு செலவு திட்டத்தில் காணோமே! இப்படி எங்களைக் கைவிடவும் காலம் வந்ததா? கெட்ட பெயர் வந்தாலும் சரி, ஒரு கை பார்த்து விடுகிறோம்" என்று உறுமு கின்றார்களாம். ஏன் இப்படி இந்த ஒநாய்கள் ஒலமிட வேண்டுமோ தெரிய வில்லை.

குடியரசின் யோக்யதை!

ஐக்கிய அமெரிக்கா ஓர் குடியரசு நாடு! அங்கு இத்தனை நாள் வரை மது விலக்குச் சட்டம் அமுலிலிருந்தது. அந்த சட்டத்தை இனி நீக்கி விடப் போகிறார்களாம். இனி மேல் இந்தக் குடியரசு குடிகார அரசாக ஆகி விடுமென்பது நிச்சயம். இத்தேசத்தில் 'நாகரிகம்' மிகுந்த மக்கள் வாழ்வதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இத்தேசத்தில் இன்னமும் நீக்ரோ மனிதர்களை உயிரோடு எரித்துப்போடும் அநி யாயம் ஒய்ந்த பாடில்லை. 1932-ம் வருஷத்தில் 8 நீகிரோவர்கள் வெள்ளையர்களால் அவ்வாறே எரிக்கப் பட்டனராம். வருஷத்திற்கு 100 பேர் வீதம் எரித்த காலம் போய் 8 பேருக்கு குறைந்திருக்கிறதைக் கண்டு சிலர் சந்தோஷ மாகத் தெரிவிக்கின்றார்கள். அற்ப சந்தோஷி கள்!

யுதிஷ்டிரர் கதை போல—

"என்னை விடாது பின்னோடு தொடர்ந்து வந்த நாய்க்கும் அனுமதி கொடுக்க வேண்டும். அப்போது தான் நான் ஸ்வர்க்கத்தில் காலை வைப்பேன். இல்லா விட்டால் எனக்கு ஸ்வர்க் கமே வேண்டாம்" என்று அன்று யுதிஷ்டிரர் கூறியது போன்று ஜாதி ஹிந்துக்களும் இந்த யுகத்தில் சொல்ல வேண்டும். ஸமூகத்தில் நாயினும் கேவலமாக இத்தனை நாள் நடத்தப் பட்டு வந்தாலும் அதைப் பொருட் படுத்தாது ஸமூகத்துக்கு உழைத்து வந்தவர்கள் ஹரி ஜனங்கள்! அந்த ஹரி ஜனங்களுக்கு அளிக் கப் படாத பொது சௌகரியங்களை மேல் ஜாதி யார் மறுத்துத் தள்ளிவிட வேண்டும் என மிஸஸ் காப்டன் மதுரையில் பேசினர்.

திப்புவின் சம்மட்டி

ஹல்வா தின்னும் ரயில்!

காசிகுடாவிலிருந்து கூனூருக்கு 746 மைல். இந்த ரயில் பாதை வழியே ஒரு மணங்கு சாமான் கொண்டு செல்ல ஒரு ரூபாய் கூலி கொடுத்தால் போதும். அதாவது ஒரு அணுவுக்கு 47 மைல் தூக்கிச் செல்கிறார்கள். ஆனால் தென்னிந்தியாவை அலங்கரித்துக் கொண்டிருக்கும் 'ஸௌத் இண்டியன் ரெயில்வே'யில் ஒரு மணங்கு சாமான் கொண்டு செல்ல கூலி என்ன தெரியுமா? குத்தாலத்திலிருந்து கள்ளிக்கோட்டைக்கு ஒரு மணங்கு சாமான் போக (327 மைலுக்கு) ரூ. 0-8-9 கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது ஒரு அணுவுக்கு 37 மைல் தான் தூக்கிச் செல்கிறார்கள். அடுத்தாற்போலுள்ள ரயில்வே கம்பெனிகளை விட தென்னிந்திய ரயில்வேயின் கூலி இவ்வளவு கிராக்கியாக யிருப்பானேன்? மற்ற ரயில்வே என்ஜின்கள் நிலக் கரி தின்கின்றனவாம், தென்னிந்திய ரயில்வே என்ஜின்கள் ஹல்வா தின்று ஓடுகின்றனவோ?

24 வயதான சட்டை!

ஸர் ஹென்றி க்ரெயிக் என்பவர் பஞ்சாப் மாகாணத்தின் பொக்கிஷ மந்திரியாவர். அங்கு சட்ட சபையில் வரவு செலவுத் திட்டம் வாதிக்கப்பட்ட போது ஒரு அங்கத்தினர் சர்க்காரைக் கண்டித்தார். வெள்ளையர்களுக்கு சர்க்கார் அதிகச் சலுகை காட்டுவதாகக் கூறினார். அதை மறுத்து ஸர் ஹென்றி சரமாரியாகப் பொழிந்தார். "பிரிட்டிஷாருக்கு எதையும் வாரிக் கொடுத்து விடுகிறோ மில்லை. ஷோக்காக வெள்ளையர்கள் வாழ்கிறார்க ளென்பது சுத்த பொய். உதாரணமாக என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் இப்போது போட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சட்டை தைத்து 24 வருஷங்க ளாகின்றன" என்று கூறினார். இந்தப் பேர்வழி சொன்னது வாஸ்தவம் தானா? இப்படி 24 வருஷத்திற்கு ஒரே சட்டையை விடாது போட்டுக் கொள்ளும் இவருக்கு மாதத்தில் சுமார் 5000 ரூபாய் சம்பளம் கொடுப்பது அனவசிய மல்லவோ?

இல்லறமும் பிரும்மசாரியமும்

மகாத்மா காந்தி எழுதியது

(சங்கு ஸுப்ரஹ்மணியன் மொழிபெயர்த்தது.)

(தபாற்கூலி உட்பட 7 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.)

ராமாயணம் கனத்த சதை

'ராமாயணம் எப்படி யிருந்தது?' என்று புருஷன் கேட்டான். 'அதுவா ரொம்ப கனமா யிருந்தது' என்று கூனியான மனைவி கூறினாள். அந்த மனைவியின் பதில் மாதிரி யிருக்கிறது சர்ச்சில் என்ற வெள்ளையன் கூறிய பதிலும். "லண்டனில் ஒரு இந்தியத் தலைவர் வந்திருந்தாரே அவரைக் கண்டு பேசினீரா?" என்று ராபர்ட் பார்னே பார்லிமெண்டில் கேட்டார். "நான் அவரைச் சந்திக்கவும் மறுத்து விட்டேன்" என்று 'கிதாப்' கூறிக் கொண்டான் சர்ச்சில். சிசுபாலனும் தந்தவக்கிரனும் நேருக்கு நேராக நின்று கண்ணனோடு போரிட பாக்கியம் பெற்றார்களாம். அதற்காக அவர்களுக்கு மோக்ஷம் கிடைத்ததாகப் புராணத்தில் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த அந்த அளவு புண்ணியம் கூடக் கிடைக்கப் பெறாத ஆன்மா ஒன்றிருக்குமானால் அது 'சர்ச்சில்' என்ற தோல் சட்டைக்குள்ளிருக்கும் ஆன்மா தான்!

சில அபூர்வ கேள்விகள்

"பிரிட்டிஷ் ராஜீய வாதிகளுக்குச் சில விஷயங்களை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

(1) போயர் யுத்தத்தின்போது பிரிட்டனுக்குச் சாதகமாக நின்ற இந்தியன் யார்? மகாத்மா காந்தி தானா அல்லது வேறு யாராவதா?

(2) மகா யுத்தத்தின்போது பிரிட்டனுக்கு பேருதவி செய்த இந்தியன் யார்? காந்திஜி தானா அல்லவா?

(3) அக்காலத்தில் இந்திய முஸல்மான்களின் கொதிப்பு அடங்குமாறு உபதேசித்த இந்தியன் எவன்?

(4) 1919ல் கோபமூண்டு எழுந்த பஞ்சாபியரை சாந்தப் படுத்திய இந்தியன் யார்?

(5) 1921-22ல் தேசத்தில் ஏற்பட்ட பலாத்கார எண்ணங்களைக் களைந்த இந்தியன் யார்?

(6) 1921ல் ஆப்கன் யுத்தம் ஏற்பட்ட போது இந்தியர்களை அடக்கிக் கொண்டிருந்த இந்தியன் யாவன்?

மகாத்மா காந்தி! மகாத்மா காந்தி! ஒவ்வொரு தடவையும் காந்திஜி தான். இதை வில்லிங்டன் ஆலோசிக்கட்டும்."

—பம்பாய் கிரானிகளில் B. F. பரூச்சா.

‘தடை நீங்கின் ராஜீயம் பேசுவேன்’

காந்திஜியைச் சர்க்கார் எரவாடாவில் அடைத்தாலும் அடைத்தார்கள், பம்பாயிலும், பூனுவிலுமுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு ஒய்ச்சல் ஒழிவில்லை. அவ்வப்பொழுது நாட்டில் நடக்கும் ஒவ்வொரு சமாசாரத்தைப் பற்றியும் அவர்கள் மகாத்மாவின் அபிப்பிராயத்தை அறிந்து, தங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். சமீபத்தில் காங்கிரஸ் விஷயம், காந்தியின் விடுதலைப் பிரச்னை இவையெல்லாம் டில்லி சபையில் கிளர்த்தப்பட்டனவல்லவா? இச்செய்திகளை யெல்லாம் சுமந்து கொண்டு ஒரு நிருபர் மகாத்மாவினிடம் ஓடினர். “தற்கால ராஜீய நிலைமையைக் குறித்துத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கத் தங்களுக்கு விருப்பமுண்டா?” எனக் கேட்டார்.

காந்திஜி பதிலளித்ததாவது: “ராஜீய விஷயங்களைப் பற்றிப் பேசவோ, அன்றி எழுதவோ இப்பொழுது எனக்கு உரிமையில்லை. அவற்றைச் செய்வதற்கு எனக்கு அனுமதி கொடுக்கப் பட்டால் நான் தற்போதைய ராஜீய நிலைமையைப் பற்றி எனது அபிப்பிராயத்தை வெளியிடத் தயார். ஆனல் இப்பொழுது எனது எண்ணம் ராஜீயத்தில் தோய்ந்து கிடக்க வில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. (1) எனக்கு அனுமதி கொடுக்கப் பட்டுள்ள தீண்டாமை விலக்குப் பிரச்னையில் நான் ஆழ்ந்து கிடக்கின்றேன்; ஆதலால் மற்ற தொல்லைகளில் நான் இறங்க வில்லை; (2) கவர்ன்மெண்டார் என் விஷயத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் கெடுக்கக் கூடியபடி தப்பித் தவறிகூட ஒரு வார்த்தையை வெளியிட நான் விரும்ப வில்லை.”

“அப்படியாயின் இப்போது நடந்து வரும் ராஜீய வியவகாரங்களில் தங்களுக்கு அக்கரையில்லையா?” என்று நிருபர் கேட்டார்.

“இல்லாமலென்ன! ஒரு அன்னியனைப் போன்று நான் அவற்றைச் சும்மா கவனித்து வருகிறேன். அவ்வளவு தான். எனக்குள்ள தடை நீக்கப்பட்டால் முக்கிய கொள்கையைப் பற்றி என் கருத்தை அறிவிப்பேன்.”

“ஹரிஜன இயக்கத்தால் பொது ஜனங்களின் மனம் சட்ட மறுப்பு இயக்கத்திலிருந்து மாறிவிட வில்லையா?” எனக் கேட்டதற்கு, “இவ் விஷயத்தை அவரவர்கள் தாங்களாகவே முடிவு செய்து கொள்ளலாம்” என்று கூறினர்.

சேத்தல் வாடு வேத்தல்

மீசை என்பது ஆண்மைக்கு அறிகுறி என்று சிலர் சொல்கிறார்கள். ‘ரோஷத்தின் வெளி வேஷமே மீசை. செய்கை யுடையவனுக்கு வேஷம் அவசிய மில்லை’ என்று அமெரிக்கர்கள் கூறுகின்றனர். ஆனல் சினிமாவில் ‘சார்லி சாப்ளின்’ என்று ஓர் கோமாளியைப் பார்த்திருக்கிறோம். மூக்கின் கீழே ஒரு அங்குலம் மயிர் வைத்துக் கொண்டு மடமையான காரியங்களை நடிப்பான். அவன் மீசையை எலி கடித்து விட்டதா வென்று குழந்தைகள் கேட்கும். அந்த அரை மீசை அழகை இந்தியாவில் யாரிடமாவது பார்க்க வேண்டுமானல் ஸர் சிமன்லால் செத்தல் வாடு என்பவரிடம் காணலாம்.

‘செத்தல் வாடு’ என்பார் மிதவாதிகள் சங்கத்தின் அக்ராஸனதிபதி. சமீபத்தில் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ பத்திரிகைக்கு இந்த அரை மீசைக்காரர் அளித்த பேட்டியில் கன்னு பின்னு வென்று சொல்லி யிருக்கிறார்.

“நாடு ரொம்ப கேவலமாகி விட்டது. சட்ட மறுப்பின் குருவாகிய காந்தி ஹரிஜன இயக்கத்தில் இறங்கி யிருக்கிறார். அறிவும் ஆற்றலுமுடைய ஆயிரக்கணக்கான இளைஞர்கள், சுயராஜ்யப் பித்தம் தலைக்கேறி, தேசபக்தி என்ற ஆவேசத்தால், சட்ட மறுப்பு என்ற வலையில் விழுந்து சிறையிலடைக்கப்பட்டு இப்போது கஷ்டப்படுகின்றனர். காந்திக்கும் ராஜீயத்துக்கும் ரொம்ப தூரம். சமாதானப் பேச்சுகளுக்கு அவர் துளியும் உபயோகமற்றவ ரென்பதை லண்டனில் கண்டோம். ஆகவே இனி அவர் சமூகச் சீர்திருத்த விஷயங்களில் தலையிடுவதே நல்லது” என்று இவர் பேசி யிருக்கிறார்.

காந்தியைப் பற்றி இந்த பிரகஸ்பதி கூறும் இந்த அபிப்பிராயம் புதிதன்று. எத்தனையோ தடவை இவர் இம்மாதிரி காந்திஜியைத் தாக்கிய துண்டு. ஆகவே இந்த அபிப்பிராயம் காய்ந்து போன வத்தல்! சக்திமானென்று தம்மை சொல்லிக் கொள்ளும் செத்தல் வாடை இந்திய இளைஞர்கள் சீண்டுவதில்லையே என் செய்வது? காந்திஜிக்கு ராஜீயம் தெரியாது என்று சொல்கின்ற இந்த அரை மீசைக்காரர் எங்கேயாவது தொட்டிலில் படுத்துக் கொண்டு பப்பர் மிண்டு தின்னலாமென்று தோன்றுகிறது. அநேக குழந்தைகளைப் போல அப்போது அவரும் “காந்திக்கு ஜே” என்று கத்தினலும் கத்துவாரென்று தோன்றுகிறது.

புண்ணிய யாத்திரை

டாக்டர் மார்கரெட் ஸ்பீகல் என்பார் ஒரு ஜர்மன் மாது. அந்த ஸ்திரீ மிக்க பக்தியோடு எரவாடாவுக்கு தாம் யாத்திரை சென்ற கதையை 'ஸர்ச் லைட்' பத்திரிகையில் எழுதி யிருக்கிறாள். அவள் எழுதி யிருப்பதன் சுருக்கம் பின்வருமாறு:—

"எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் மகாத்மா காந்தியைப் போன்ற அவதார புருஷர் இதுவரை தோன்றியதே யில்லை. எந்த மகானையாவது 32 கோடி மக்கள் அவர் காலத்திலேயே பின்பற்றியதுண்டா? அப்பேர்ப்பட்ட தெய்விக புருஷனைத் தரிசிப்பதற்காக யான் இந்தியாவுக்கு வந்தேன். முதலில் ஸபர்மதியில் அவருடைய ஆசிரமத்தைப் பார்க்க விரும்பினேன். "மகாத்மாஜி இல்லாத ஆஸ்ரமத்திற்குப் போக வேண்டாம். உயிரில்லாத உடல் போன்றது அது" என்று பலர் சொன்னார்கள்.

டிஸம்பர் 18௳ யன்று இந்தியா எங்கும் ஹரிஜன தினம் கொண்டாடப்பட்ட போது நானும் ஊர்வலத்தில் கலந்து கொண்டேன். அன்று விளம்பர அட்டைகளைத் தோளில் மாட்டிக் கொண்டு சென்ற ஐரோப்பிய ஸ்திரீ நான் தான்.

மகாத்மாவுக்குப் பிரியமான மூன்றாவது வகுப்பிலேயே பிரயாணம் செய்து பூனாவுக்கு வந்தேன். மறு நாள் எரவாடாவில் போய் விசாரித்த போது மகாத்மாவைக் காண அநேகர் காத்திருப்பதாகவும், ஆகவே நான் பொறுத்து வர வேண்டுமென்றும் தெரிவிக்கப் பட்டேன். டிஸம்பர் 21-ம் தேதி யன்று எனக்கு மகாத்மாவிடமிருந்து உத்தரவு கிடைத்தது. நானும் 'எரவாடா ஜெயில்' என்ற கோயிலுள் நுழையும் பாக்கியம் பெற்றேன்.

ஒரு மரத்தடியில் மகான் படுத்திருக்கிறார். அந்தச் சிறிய துணியைத் தான் கட்டிக் கொண்டிருக்கிறார். மகாத்மா முகத்தில் துளியாவது 'அழகு' கிடையாது. ஆனால் எல்லாவற்றையும் அவரது மோகனச் சிரிப்பு கவர்ந்து விடுகிறது. எனது கைகளைக் குலுக்கி நாற்காலியில் அமரும்படி காந்திஜி கூறினார். நான் உட்கார்ந்து என் 'தக்ளி' சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்தேன்.

"தாங்கள் நூல் நூற்கின்றீர்களா? அல்லது என் கழுத்துக்கு கயிறு திரிக்கின்றீர்களா? பக்கத்தில் தான் தூக்கு மேடையும் இருக்கிறது" என்று புன்சிரிப்போடு கூறினார் காந்திஜி. பிறகு தமது கையில் 'தக்ளியை' வாங்கி நூற்றுக் காட்டினார். "நீங்கள் உபாத்தியாயர் உத்யோகம் பார்த்ததாகச் சொல்கிறீர்களே! கற்றுக் கொள்ளப் பொறுமை யுடையவர்கள் தான் கற்றுக் கொடுக்கும் திறமை யுடையவர் ஆவார்கள்" என்று சொன்னார் காந்திஜி. அப்புறம் எனக்கு முதன் முதலில் 'தக்ளி' சொல்லிக் கொடுத்தவரைப் பற்றி காந்திஜியிடம் புகார் செய்ய வேண்டி யிருந்தது. "அவரா? அவருக்கு ஹிந்தி சொல்லித்தரத் தெரியுமேயன்றி தக்ளி தெரியாதே?" என்றார் காந்திஜி. "அவர் தக்ளியைப்பற்றி ஓர் புத்தகம் எழுதியிருக்கிறாரே" என்று நான் காந்திஜிக்கு நினைப்பூட்டினேன். "அவருக்கு நூற்கத்தெரியாத காரணத்தினால் தான் அவர் அதைப் பற்றிப் பிரமாதமாக எழுதுகின்றார்" என்று வேடிக்கையாக காந்திஜி கூறினார்.

இந்தப் பேச்சின்போது அது ஒரு ஜெயில் என்ற எண்ணமே எனக்கு ஏற்பட வில்லை. அந்தச் சிறையில் 3000 கைதிகளோடு மகாத்மாவும் ஒரு கைதி! ஆனால் அவர்தான் கைதிகளுக் கெல்லாம் அரசர்! அவருக்கு முன்னே ஸோல்ஜர்களும் காவற் காப்பவர்களும் பயபக்தியோடு நடக்கின்றனர். அவரது ஆத்மா அனைவரையும் வலிய இழுத்து மயக்கி விடுகிறது. அன்றைய தினம் வெள்ளைக் கதர்ப் புடவைகளை அணிந்த நங்கையர் பலர் காந்திஜியைக் காண்பதற்கு வந்திருந்தனர். அவர்கள் ஹரிஜனப் பணி செய்கிறவர்களென்று சொன்னார்கள். அநேக இளைஞர்களும் வந்திருந்தனர். இந்தச் சிஷ்யவர்க்கத்தின் மத்தியில் காந்திஜி உட்கார்ந்திருந்த காட்சி பண்டைக் காலத்திய ஏசுநாதரையும், ஸாக்ரடீஸையும் ஞாபகப்படுத்தியது. கடைசியாக நான் மாமிச போஜனம் செய்வதை நிறுத்தி விடுவதாக சத்தியம் செய்து விட்டுத் திரும்பினேன். இந்தப் புனித யாத்திரையினால் நான் கிருதார்த்த மடைந்தேன்.

மீண்டும் கேய்ஸர் வருவானு?

ஒரு காலத்தில் உலகையே கிடுகிடுக்கும்படி செய்த ஜர்மன் சக்கிரவர்த்தி கெய்ஸர் மீண்டும் ஜர்மனிக்குள் வருவானுவென்று ஐரோப்பா முழுவதும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

உவான் ஹிந்தென்புர்க்கு என்ற கெய்ஸரின் சேனுதிபதி இன்று குடியரசுத் தலைவனுக இருந்து கொண்டிருக்கிருன். நாட்டில் அபேத வாதக் கிளர்ச்சியும், பொது வுடமைப் புரட்சியும் அளவுக்கு மிஞ்சிக் கூத்தாடுவதைத் தடுக்க ஹிட்லர்-பேபன் கூட்டத்தினிடம் சர்க்காரை ஒப்படைத்தார்கள். கிளர்ச்சிகளை யொழிக்க கடுமையாக நாட்டில் அடக்கு முறை தாண்டவ மாடத் தொடங்கி யுள்ளது.

இப்போது ஜர்மனியின் மனதைக் கவர்ந்திருக்கும் இன்னெரு கட்சிக்குப் பெயர் நாஸிக் கட்சி. நாஸிக்களின் தலைவன் ஹெர் ஹிட்லர். அந்த நாஸிக் கட்சியில் மாஜி கெய்சரின் புத்திர னெருவனும் தலைவனுக யிருக்கின்ருன். மாஜி கெய்ஸர் மீண்டும் ஜர்மனிக்குள் நுழைவதில் நாஸிக்களுக்கு ஆக்ஷேப மிருக்காது என்று ஊகிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் கெய்ஸரின் கீழ் மகா சேனுதிபதியாக விருந்த தலைவர் ஹிந்தென்புர்க்குக்கும் இவ் விஷயத்தில் ஆக்ஷேப மிருக்காது. ஆகவே கெய்ஸர் மீண்டும் ஜர்மனிக்குள் நுழைவானு வென்ற கேள்வியே ஐரோப்பாவில் முழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது ஜர்மனியில் தேர்தல்! தேர்தலில் எந்தக் கக்ஷியினருக்கு பெரும்பான்மையான வெற்றி யென்ற கணக்கு கிடைக்க வில்லை. ஆனுல் பொது வுடமைக் கட்சியையும், அபேத வாதிகளையும் தேர்தல் கலாட்டாவினின்று தொலைப்பதற்கு ஜர்மனி எடுத்துக் கொண்ட கடுமையான முறைகள் பலித்து விட்டன. ஜர்மன் சட்ட சபை யாகிய 'ரீச்ஸ்டாக்கை' எந்தப் பயல்களோ கொளுத்தி விட்டார்க ளென்ருல் அங்கு ஏற்பட்டுள்ள ரகளையின் போக்கை நாம் ஊகிக்கலா மன்ருே! அது மட்டு மன்று. ஜர்மன் கலாட்டாவில் ஆங்கிருந்த இரு இந்திய கனவான்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்துளது. நமது சரோஜினி தேவியின் குமாரர் ஸ்ரீயுத ஜேசுவா நாயுடும், மற்ருெரு உறவினரான ஸ்ரீயுத நம்பியாரும் கைதியாகப்பட்டனரென தந்தி வந்தது. இவர்களை ஜர்மன் கவர்ன்மெண்டு என்ன செய்யப் போகிறதோ?

"யுத்தங்களில் சேராதே!"

இந்திய மாணவர்கள் ஏதாவது ராஜீயப்பேச்சுப் பேசினுல் உடனே காலேஜ் அதிகாரிகள் "கப் சப் பேசாதே!" என்று வாயடக்கி விடுகின்றனர். ஆனுல் சீமையில் ஆக்ஸ்போர்டில் என்ன நடக்கின்றது தெரியுமா? போன மாதத்தில் அங்கு மாணவர் சங்கம் ஒரு வாக்கு வாதத்தை நடத்திற்று. "இராஜனுக்காகவும் தேசத்துக்காகவு மென்று எக்காரணத்தைக் கொண்டும் எவரும் யுத்தங்களில் கலந்து கொள்ளலாகாது" என்ற தீர்மானம் அங்கு நிறைவேறி விட்டது.

"விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?" என்பார்கள். அந்த மாதிரி ஒட்டை வாய்ச் சர்ச்சில் துரைக்கு உளறு வாயனுக ஒரு மகன் இருக்கிருன். அவன் பெயர் 'ராண்டால்ப் சர்ச்சில்'. அந்தப் பையன் ஆக்ஸ்போர்டில் இருக்கின்ருன். அவன் மேற்படி தீர்மானத்தை எதிர்த்துப் போன வாரத்தில் ஓர் தீர்மானம் கொண்டு வந்தான். ஆனுல் பாவம் அப்பன் கதியே பிள்ளைக்கும்! வாதத்தில் தோற்றுப் போனுன். 'இராஜனுக்காகவும், தேசத்துக்காகவும் யுத்தத்தில் சேரலாகாது' என்று ஆக்ஸ்போர்ட் மாணவர்கள் தீர்மானித்து விட்டனர்.

வாய் வேதாந்தம்! கை சித்தாந்தம்!

"உலகில் யுத்தங்கள் நடக்கக் கூடாது. தேசங்கள் தங்கள் போர்க் கருவிகளை குறைத்துக் கொள்ள வேண்டும்" என்று வாய் வேதாந்தம் பேசுவதில் முதல் 'பிரைஸ்' பெற்றது பிரிட்டிஷ் அரசு. ஆனுல் அந்த அரசில் அடுத்த வருடத்தில் இராணுவ இலாகாவுக்காக 3 கோடியே 80 லக்ஷம் பவுன் செலவழிக்கப் போகின்ருர்களாம். அதாவது சென்ற வருடத்தை விட இந்த வருடத்தில் 15 லக்ஷம் பவுன் அதிகம் செலவழிப்பதென்று தீர்மானித்திருக்கிருர்கள். இராணுவத்தின் திறமையை இன்னும் அதிகமாக்க அதிகப் பணம் வேண்டுமாம். திடீரென்று தன் இராணுவத்தின் திறமையை அதிகமாக்கிக் கொள்ள பிரிட்டனுக்கு புத்தி வந்திருப்பதற்கு காரணம் கடவுளே அறிவார். பிரிட்டிஷாரின் வாய், முணுமுணுக்கும் மந்திரமோ "ஆயுதப் பரிகரணம்!" ஆனுல் அவர்கள் கையோ இராணுவத்திற்கு அதிகச் செலவு செய்ய முனைகின்றது. என்ன தந்திரமையா?

பொறுக்கிய புஷ்பங்கள்

மதுரையில் 'வானர சேனை' ஊர்வலம் நடந்த போது போலீசார் வந்து கொடிகளையும் பிடுங்கிக்கொண்டு, ஊர்வலத்தையும் கலைத்தனர்.

சென்னையில் பிப்பரவரி மாதப் பிற்பாதியில் சட்ட மறுப்பு சம்பந்தமாக 21 பேர் தண்டனையடைந்தார்கள்.

கண்ணனூரில் ஊர்வலம் சென்ற 6 தொண்டர்களை போலீஸார் தடுக்க, அவர்கள் கலைய மறுக்கவே போலீஸார் கைது செய்தனர்.

கண்ணனூர் ஏ. கே. கோபாலன் என்பவருக்கு சட்ட விரோதமான சபையென்று கருதப்பட்ட கேரள மாகாண காங்கிரஸ் சபையில் சம்பந்தம் வைத்துக் கொண்டால் கைது செய்யப்படுவர் என்று உத்திரவு.

கும்பகோணத்தில் 144-வது தடையுத்திரவு போடப் பட்டிருப்பதால் கண்காக்ஷி சாலையிலுள்ள புத்தகசாலை பிரசார பிரசங்கத்துக்குத் தடை ஏற்பட்டிருக்கிறதாம்.

கள்ளிக்கோட்டையில் விதேசி ஜவுளிக் கடையில் மறியல் செய்ததற்காக 10 தொண்டர்கள் இரண்டிரண்டு பேராக கைது செய்யப்பட்டனர்.

'அனாத் சிரார்த்த' தினத்தைக் கொண்டாடும்படி கூறும் புரட்சி விளம்பரங்களைக் கைப்பற்றுவதற்காக புதிய டெல்லியில் 'அர்ஜுன்' ஆபீஸ் உள்பட எட்டு இடத்தில் ஏக காலத்தில் சோதனை நடந்ததாம்.

மகாராஷ்டிர பாஷையிலுள்ள 'ரஷ்யப் புரட்சி சரிதம்' என்னும் புத்தகத்தைப் பறிமுதல் செய்யும்படி பம்பாய் சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

அகோலா தாலுக்காவில் 54 கிராமங்களுக்கும், கும்டா தாலுக்காவில் 8 கிராமங்களுக்கும் கிராமத்தார்களுடைய செலவில் ஒரு வருஷ காலத்துக்கு விசேஷ போலீஸ் பந்தோபஸ்து வைப்பதென்று பம்பாய் சர்க்கார் கெஜட்டில் வெளி யிட்டிருக்கின்றனர்.

அபிகார் கலெக்டர் ஆபீஸில் ஜில்லா மகாநாடு கூடி, கொடி யேற்றி, துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக இரண்டு ஸ்திரீகள் உள்பட 11 பேர் கைதியாயினர்.

காசியில் காங்கிரஸ் பிரசாரம் நடத்தியதற்காக தர்ம தேவ சாஸ்திரிக்கு 6 மாதம்.

ஆமதாபாத் முனிசிபல் தலைவர் G. U. மாவலங்கர் அவசரச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டு சபர்மதி சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

பம்பாயில் ஹாஸன் கபூர் என்பவருக்கு ஹைக்கோர்ட்டில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக 6 மாதமும், 40 ரூ. அபராதமும்.

மதுரையில் மேல வாசற்படிக்கருகில் உள்ள சேரியில் ஒரு பள்ளிக்கூடம் ஹரிஜனங்களுக்காக திறந்து வைக்கப் பட்டது.

ஹரி ஜனங்களுக்கு உயர்தரக் கல்வியளிப்பதற்காக காந்திஜியிடம் ஒருவர் 2500ரூ. கொடுத்திருக்கிறார்.

குடிவாடாவில் ஹரிஜன பிரசாரகரான சுப்பிரமணியம் என்பவர் கைது செய்யப்பட்டார். அது சம்பந்தமாக மகாத்மாவுக்கும் தந்தி யனுப்பி யிருக்கிறார்கள்.

தஞ்சை ஜில்லா துக்காச்சி கிராமத்தில் மிராசுதார்கள் கிஸ்தி கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமையில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் போலீஸாருடன் ஜப்திக்கு வந்த போது பலர் பசு மாடு, நெல் பட்டரை, எருமை, அறுவடை செய்யாத வயல், குடம், அண்டா, வண்டி மாடு முதலியவைகளை ஜப்திக்குக் கொடுத்தார்களாம்.

ஜப்பானில் பூகம்பத்தினால் 300 மைல் வரை சேதமாம். 4500 வீடுகள் நாசம். 306 பேர் இறந்தனர். 1222 பேருக்கு காயமாம்.

1931ல் 1113 கைதிகளும், 1932ல் 982 கைதிகளும், 1933 ஜனவரியில் 41 கைதிகளும் அந்தமானுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றனர்.

புகையிலைக்கு தீர்வை விதிப்பதை சட்டமாக்கும் மசோதா பம்பாய் சட்ட சபையில் பெரும்பாலான வோட்டுக்களால் நிறைவேறியது.

சமீபத்தில் பம்பாயில் 10 லக்ஷம் ஜதை பூட்ஸுகள் அன்னிய நாட்டிலிருந்து ஒரு கப்பலில் வந்திறங்கினவாம்.

லாகூரில் ஒரு ராஜீய கைதியை அளவு கடந்து சிறையில் வைத்திருந்ததற்காக இந்தியா மந்திரி மீது 600 ரூபாய்க்கு நஷ்ட ஈடு வழக்குத் தொடரப்பட்டு, சம்மன் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane Madras.